3.06.2026 O.S. 154/2015 பி.வா.சா.1 வெங்கடேஷ்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு 7,11,17,19,21 முதல் 27 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

என் தாத்தா பார்வதி செட்டியார் தான் இந்த வழக்கில் 1ம் பிரதிவாதி என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் தகப்பனார் பெயர் சுப்பிரமணி செட்டியார். சுப்பிரமணியன் செட்டியாருக்கு 1ம் பிரதிவாதி தான் ஒரே மகன் என்றால் சரிதான். சுப்பிரமணியன் செட்டியாருக்கு பார்வதி செட்டியார் மற்றும் முத்துசாமி செட்டியார் என்ற இரு மகன்கள் உண்டு என்றால் சரிதான். முத்துசாமி செட்டியாரின் மனைவி பெயர் ஆறுமுகத்தம்மாள் என்றால் சரிதான். முத்துசாமி ஆறுமுகத்தம்மாள் தம்பதியருக்கு குழந்தைகள் கிடையாது என்றால் சரிதான். பார்வதி செட்டியாருக்கு 3 ஆண், 3 பெண் வாரிசுகள் என்றால் சரிதான். பார்வதி செட்டியாரின் 3 ஆண் வாரிசுகள் 1ம் வாதி லெட்சுமணன், 2ம் பிரதிவாதி சுப்பிரமணியன், மற்றும் என் அப்பா செல்வம் ஆகும். பார்வதி செட்டியாரின் பெண் மக்கள் 8 முதல் 10 பிரதிவாதிகள் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி சுப்பிரமணியன் மனைவி 7ம் பிரதிவாதி குருவம்மாள் என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்துக்கள் 1ம் பிரதிவாதியின் தந்தை சுப்பிரமணியன் செட்டியாருக்கு சொந்தமானது என்றால் சரிதான். இந்த வழக்கில் என்னென்ன சொத்துக்கள் காட்டப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியும். வழக்கில் 1ம் அயிட்ட சொத்தாக காட்டப்பட்டுள்ள கணக்க பிள்ளைவலசை கிராமம் சர்வே எண்.45/1ல் 1 ஏக்கர் 24 செண்டு என்றால் சரிதான். இந்த சொத்தை கடந்த 21.2.1940ம் தேதி என் தாத்தாவின் அப்பா சுப்பிரமணியன் கிரையமாக வாங்கியுள்ளார் என்றால் சரிதான். இந்த கிரைய ஆவணம் சாட்சி வசம் காட்டப்படுகிறது. சாட்சி பார்த்து ஒப்புக்கொள்கிறார். அந்த கிரைய ஆவணம் பி.வா.சா.ஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த சொத்தினை 1961ம் ஆண்டு சுப்பிரமணியன் செட்டியார் ஒரு செட்டில்மெண்ட் எழுதி வைத்தார் என்றால் சரிதான். அந்த செட்டில்மெண்ட் பத்திரத்தில் அவரும், அவரது மனைவியும் ஆயுள் வரை அனுபவம் செய்ய வேண்டும்

என்றும், அவர்களது ஆயுளுக்கு பின்னர் அவரது இரு மகன்களுக்கு சென்று சேர வேண்டும் என்று எழுதப்பட்டது என்றால் சரிதான். செட்டில்மெண்ட் ஆவணத்தின்படி 1ம் பிரதிவாதிக்கு பாதி பாகமும், அவரது சகோதரர் முத்துசாமிக்கு பாதி பாகமும் உரிமை உண்டு என்றால் சரிதான். முதலில் முத்துசாமி இறந்து போனார். பிறகு அவரது மனைவி ஆறுமுகத்தம்மாள் இறந்து போனார் என்றால் சரிதான். 31.3.1964ல் ஆறுமுகத்தம்மாள் முத்துசாமிக்குரிய பாகத்தை 1ம் பிரதிவாதிக்கும், அவருடைய மகன்களுக்கும் சென்று அடைய விடுதலை பத்திரம் எழுதி கொடுத்தார் என்றால் சரிதான். சாட்சி வசம் அந்த விடுதலை பத்திரம் சான்று நகல் காட்டப்படுகிறது. சாட்சி ஒப்புக் கொள்வதால் அந்த ஆவணம் பி.வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 1ம் பிரதிவாதி அவரது மகனான 2ம் பிரதிவாதிக்கு வழக்கு 1ம் தபசில் சொத்தில் 90 செண்டை நன்கொடையாக கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதி இந்த வழக்கில் என்ன கட்சி செய்து வருகிறார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு நன்கொடையாக கொடுத்த 90 செண்ட் சம்பந்தமான ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. 2ம் பிரதிவாதி வழக்கு சொத்தை பல 3ம் தரப்பினர்களுக்கு கிரையம் செய்து கொடுத்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனது வழக்கறிஞர் மூலம் தெரிந்து கொண்டேன். இந்த வழக்கில் மொத்த சொத்தில் எவ்வளவு பங்கு நான் கேட்கிறேன் என்றால் 3ல்1 பங்கு கேட்கிறேன். என் தாத்தா 1ம் பிரதிவாதி கைவசம் இருந்த சொத்தில் தான் நான் 3ல் 1பங்கு கேட்கிறேனா என்றால் ஆமாம். என் தாத்தா 1ம் பிரதிவாதி இறக்கும் தேதியில் என்ன சொத்து விட்டு சென்றாரோ அந்த சொத்தில் தான் நான் 3ல் 1 பங்கு கேட்க முடியும் என்றால் சரிதான். என் தாத்தா இறந்த காலத்தில் பிராது தபசில் சொத்தில் எந்த சொத்துக்கள் அவரது கைவசம் இருந்தது என வில்லங்க சான்று எடுத்து பார்க்கவில்லை என்றால் சரிதான். என் தாத்தா உயிரோடு இருந்த

காலத்திலேயே 2ம் பிரதிவாதிக்கு சில சொத்துக்களை நன்கொடையாக எழுதி கொடுத்தார் என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் முன்பு தெரியாது. தற்போது தான் தெரிந்து கொண்டேன். என் தாத்தா உயிருடன் இருந்த காலத்தில் அவரது 3 பெண் வாரிசுகளுக்கு தலா 15 செண்ட் நன்கொடை எழுதி கொடுத்தார் என்றால் தெரியாது. வழக்கு தபசில் சொத்து முழுவதும் 1ம் பிரதிவாதி இறக்கும் காலத்தில் 1ம் பிரதிவாதி வசம் இல்லை என்றால் எனக்கு தெரியாது. 28.11.2014ம் தேதியன்று 1ம் பிரதிவாதி என் தாத்தா வழக்கு 1ம் தபசில் 1ம் அயிட்ட சொத்தில் 90செண்டை 2ம்பிரதிவாதிக்கு நன்கொடையாக கொடுத்துள்ளார் என்றால் வழக்கறிஞர் மூலம் தெரிந்து கொண்டேன். சாட்சி வசம் நன்கொடை ஆவணம் காட்டப்படுகிறது. சாட்சி ஆவணத்தை பார்த்து சரிதான் என்று ஒத்துக்கொள்வதால் அந்த ஆவணம் பி.வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தபசில் சொத்தை கிரையம் பெற்ற நபர்கள் அவர்களது அனுபவத்தில் தான் உள்ளது என்றால் தெரியாது. சொத்துக்கள் காலியிடமாக தான் உள்ளது. நான் எனது பெரியப்பா மகன் கொண்டு பராமரித்து வருகிறேன். வழக்கு சொத்துக்கள் சிலபகுதிகளில் மரங்கள் உள்ளது. மற்ற இடங்கள் காலியாக உள்ளது. நான் கேட்கின்ற பங்கு எனக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.

**வாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

என் அப்பாவுடன் பிறந்தவர்கள் இரண்டு ஆண்கள். அவர்கள் பெயர் லெட்சுமணன், சுப்பிரமணியன் ஆகும். பார்வதி செட்டியார் எனது தாத்தா ஆகும். பிராது தபசில் சொத்துக்களை யார் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சுப்பிரமணியன் செட்டியாரின் வாரிசுகள் , லெட்சுமண செட்டியாரின் வாரிசுகள் மற்றும் எனது தந்தை செல்வம் செட்டியாரின் வாரிசுகள் அனுபவித்து வருகிறோம். சுப்பிரமணியன் செட்டியாரின் மனைவி பெயர் ஆவுடையம்மாள் ஆகும். அவர்களுக்கு 3 பிள்ளைகள். அதில் ஒருவர் முருகேசன்

காலமாகிவிட்டார். மற்ற இரண்டு நபர்கள் கல்யாணகுமார், முத்துமாரி ஆகும். சுப்பிரமணியனுக்கு ஒரே மனைவி தான். பிரதிவாதிகள் 5 முதல் 13 வரையுள்ளவர்களை எனக்கு தெரியாது. 14,15 பிரதிவாதிகள் சுப்பிரமணியன் செட்டியாரின் வாரிசுகள். 16 முதல் 33 வரையுள்ள பிரதிவாதிகளை எனக்கு தெரியாது. தபசில் சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்பதால் அதில் நான் பங்கு கேட்கிறேன்.

(Sd)K.சுதா ராணி,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.